ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்:dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்:www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 25.09.2019 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 யூலை

### முக்கிய பண்புகள்

- இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க கூடுதலாக ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2019 யூலையில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. பல மாதங்களாகக் காணப்பட்ட உறுதியான வளர்ச்சியின் பின்னர் 2019 யூலையில் ஏற்றுமதி வருவாய்கள் 7.0 சதவீதம் கொண்ட (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் இறக்குமதிச் செலவினம் 2.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தது.

- 2019 யூலையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு நீர்க்கல எரிபொருளின் குறைந்த விலைகள் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய் குறைவடைந்தமையும் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்தில் உயர்ந்த ஏற்றுமதித் தளத்தினைத் தோற்றுவித்த 2018 யூலையில் இடம்பெற்ற கப்பற் கலமொன்றின் ஏற்றுமதியும் காரணங்களாக அமைந்தன.

- 2019 யூலையில் வர்த்தகப் பற்றாக்குறை 2019 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 316 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 717 மில்லியனுக்கு விரிவடைந்தது.

- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்திலிருந்து சுற்றுலா வருகைகள் குறிப்பிடத்தக்களவிற்கு மீட்சியடைந்தமையை அவதானிக்க முடிந்ததுடன் இது 2019 யூலையில் முன்னைய மாதத்திலும் பார்க்க 83.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

- 2019 யூலையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 626 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,895 மில்லியனாக விளங்கின.
- 2019 யூலையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பிடத்தக்களவு உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்த வேளையில் சில வெளிப்பாய்ச்சல்கள் அரச பிணையங்கள் சந்தையில் பதிவுசெய்யப்பட்டன.

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.** https://www.cbsl.gov.lk/ta/node/6181

- 2019 யூலை இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.3 பில்லியனாக விளங்கி 4.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவிருந்தன.

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | யூலை 2018 ஐ.அ.டொ. மில் | யூலை 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-யூலை 2018 ஐ.அ.டொ. மில் | சன-யூலை 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,073 | 999 | -7.0 | 6,805 | 6,998 | 2.8 |
| இறக்குமதிகள் | 1,754 | 1,716 | -2.2 | 13,196 | 11,312 | -14.3 |
| வர்த்தக மீதி (தேறிய) | -681 | -717 | | -6,391 | -4,314 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 409 (ஆ) | 217 (இ) | -46.9 | 2,595 (ஆ) | 2,110 (இ) | -18.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 619 | 626 | 1.0 | 4,243 | 3,895 | -8.2 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -3 | 44 | | 50 | 34 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 73 | 98 | | 3,947 | 5,628 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 29 | 40 | | 582 | 417 | |
| நீண்ட காலக் கடன்கள் | 44 | 57 | | 865 | 812 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 2,500 | 4,400 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 252 | 164 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (உ) | | | | 336 | 262 | |
| திரண்ட நிலுவை | | | | 554 | 1,490 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2019 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்.

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.


## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2018 நவெம்பரிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்த வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலும் மாதத்திற்கு மாத அடிப்படையிலும் 2019 யூலையில் விரிவடைந்தது. ஒன்றுசேர்ந்த நியதிகளில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,076 மில்லியனால் ஐ.அ.டொலர் 4,314 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது.

- அதேவேளை, ஏற்றுமதிகளின் நியதிகளில் இறக்குமதிகளின் ஒப்பீட்டு ரீதியான விலைகளைப் பிரதிபலிக்கின்ற வர்த்தக மாற்று விகிதம், இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுமதி விலைகள் மெதுவான வேகத்தில் குறைவடைந்தமையின் காரணமாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.9


சதவீதத்தினால் மேம்பட்டன. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்தினால் சிறிதளவில் தேய்வடைந்தது.

**வரைபடம் 1: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2018 – 2019)**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: வர்த்தக மாற்று விகிதம் (2018 – 2019)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2019 யூலையில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 999 மில்லியனுக்கு 7.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளும் அதனைத் தொடர்ந்து வேளாண்மை ஏற்றுமதிகளும் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.


- கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவுகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்ட போதும் நீர்க்கல எரிபொருளின் தாழ்ந்த விலைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான தாழ்ந்த வருவாய்களும் அதேபோன்று 2018 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஏனைய பெற்றோலிய உற்பத்திகளின் உயர்ந்த நேரடி ஏற்றுமதிகளின் தளத் தாக்கமும் காரணங்களாக அமைந்தன. போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 77 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்து 2018 யூலையில் யப்பானிற்கு நிரம்பல் செய்யப்பட்ட கடற்போக்குவரத்துக் கலத்தின் தளத் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. இறப்பர் உற்பத்திகள் தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி, அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகளும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை 2019 முதலரைப்பகுதியில் சராசரியாக 9.5 சதவீதம் கொண்ட மாதாந்த வளர்ச்சியைப் பதிவுசெய்த புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2019 யூலையில் 2.1 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

- 2019 யூலையில், வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்து தெங்கு, இறப்பர், மற்றும் கடலுணவு தவிர்ந்த அனைத்துத் துணை வகைகளிலுமிருந்தான குறைந்த வருவாய்களைப் பிரதிபலித்தன. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த விலைகளினதும் அளவுகளினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். கறுவா மற்றும் மிளகின் குறைந்த செயலாற்றம் காரணமாக வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

- 2019 யூலையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 யூலையுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.


- 2019 யூலையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 6.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2018 யூலையுடன் ஒப்பிடுகையில் அளவு மற்றும் விலைகள் இரண்டும் குறைவடைந்தமையின் காரணமாக ஏற்றுமதிகளின் செயலாற்றம் குறைவடைந்தமையை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | யூலை 2018 ஐ.அ.டொ. மில். | யூலை 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-யூலை 2018 ஐ.அ.டொ. மில். | சன-யூலை 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | 843.6 | 789.5 | (6.4) | 5,277.3 | 5,518.1 | 4.6 |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 38.8 | 36.7 | (5.4) | 271.1 | 270.0 | (0.4) |
| விலங்குத்தீன் | 11.9 | 10.0 | (15.8) | 66.0 | 80.7 | 22.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 465.6 | 475.6 | 2.1 | 2,984.6 | 3,237.0 | 8.5 |
| இதில் ஆடைகள் | 435.2 | 443.4 | 1.9 | 2,786.0 | 3,014.2 | 8.2 |
| புடவைகள் | 22.6 | 23.1 | 2.3 | 143.2 | 161.0 | 12.5 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் | 7.9 | 9.1 | 15.6 | 55.4 | 61.8 | 11.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 77.4 | 76.3 | (1.4) | 503.8 | 518.4 | 2.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 19.4 | 24.7 | 26.9 | 170.9 | 175.6 | 2.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 38.4 | 36.0 | (6.3) | 258.3 | 242.5 | (6.1) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 31.4 | 7.2 | (77.0) | 82.4 | 114.5 | 38.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 68.8 | 43.0 | (37.5) | 340.9 | 285.0 | (16.4) |
| இரசாயன உற்பத்திகள் | 17.0 | 15.5 | (8.8) | 98.8 | 103.4 | 4.7 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.1 | 10.2 | (8.2) | 81.5 | 80.9 | (0.7) |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 4.2 | 0.7 | (84.0) | 14.4 | 24.0 | 66.7 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 13.1 | 6.3 | (52.0) | 90.6 | 64.4 | (29.0) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.6 | 6.2 | 11.6 | 44.2 | 42.6 | (3.6) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 14.7 | 16.4 | 11.5 | 91.7 | 107.1 | 16.7 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.7 | 2.7 | 1.4 | 17.3 | 16.8 | (3.1) |
| ஏனையவை | 23.5 | 22.1 | (6.0) | 160.7 | 155.2 | (3.4) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | 225.7 | 205.1 | (9.1) | 1,498.0 | 1,450.2 | (3.2) |
| தேயிலை | 125.2 | 111.3 | (11.1) | 854.2 | 796.3 | (6.8) |
| இறப்பர் | 1.6 | 1.9 | 20.3 | 20.3 | 16.9 | (16.8) |
| தேங்காய் | 28.2 | 30.9 | 9.6 | 178.3 | 204.1 | 14.5 |
| வாசனைத்திரவியங்கள் | 34.3 | 26.5 | (22.8) | 184.0 | 170.1 | (7.6) |
| காய்கறிகள் | 3.5 | 2.5 | (28.5) | 16.0 | 18.5 | 15.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.0 | 2.8 | (6.0) | 19.8 | 19.4 | (2.0) |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 11.9 | 8.8 | (26.0) | 74.0 | 61.1 | (17.5) |
| கடலுணவு | 18.0 | 20.4 | 13.1 | 151.4 | 164.0 | 8.3 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | 2.8 | 2.7 | (1.8) | 19.4 | 19.4 | (0.0) |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | 1.1 | 1.3 | 13.1 | 10.3 | 10.1 | (2.3) |
| **மொத்த ஏற்றுமதிகள்** | 1,073.2 | 998.5 | (7.0) | 6,805.0 | 6,997.7 | 2.8 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை


## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2019 யூலையில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் தொடர்ந்து ஒன்பதாவது மாதமாகச் சுருக்கமடைந்து, குறைந்த வீதமான 2.2 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர்

1,716 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளும் அதனைத் தொடர்ந்து இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளும் முக்கியமாகப் பங்களித்தன.


- நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்து உணவு, குடிபானம் மற்றும் உணவல்லாப்பொருட்கள் இரண்டிலும் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலித்தது. சீனி மற்றும் இனிப்பு வகைகள், குடிபானங்கள் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகள் உணவு மற்றும் குடிபானங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்த வேளையில் தனியாள் உந்து ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகள் உணவல்லா நுகர்வுப்பொருட்களில் சுருக்கத்தை விளைவித்தன. எனினும், மாதத்திற்கு மாத அடிப்படையில் தனியாள் உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் பெரும்பாலும் இரண்டு மடங்காகியமைக்கு சலுகை உரிமத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் ஊர்திகளுக்கான நாணய கடிதத்தினைத் திறப்பதன் மீது விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை மீளப்பெறப்பட்டமையினைத் தொடர்ந்து சலுகை உரிமங்களைப் பயன்படுத்தி ஊர்திகள் இறக்குமதி செய்யப்பட்டமையே காரணமாகும்.
- 2019 யூலையில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் 0.6 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு அடிப்படை உலோகங்கள், வளமாக்கி, தாள் மற்றும் தாள் அட்டைகளின் குறைந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். அடிப்படை உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 48.7 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொலர் 47 மில்லியனாக விளங்கியது. எனினும், இறக்கமதி செய்யப்பட்ட மசகுஎண்ணெய்யின் அளவு உயர்வடைந்தமையின் காரணமாக எரிபொருள் இறக்குமதிகள் கணிசமானளவிற்கு அதிகரித்தன. கோதுமை, சோளம் மற்றும் கனிம உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செவினமும் அதிகரித்தது.
- அதேவேளை, முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2019 யூலையில் சிறிதளவால் அதிகரித்தமைக்கு கட்டட மூலப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும். இரும்பு மற்றும் உருக்கு மற்றும் சீமெந்து இறக்குமதிகள், கட்டடப்பொருட்களின் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. எனினும், பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதிகள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.
- இறக்குமதி அளவுச் சுட்டெண் 2.2 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் அலகுப்பெறுமதிச் சுட்டெண் 4.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018 யூலையுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளே முழுமையான காரணமாக அமைந்தமையை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | யூலை 2018 ஐ.அ.டொ. மில். | யூலை 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-யூலை 2018 ஐ.அ.டொ. மில். | சன-யூலை 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **389.4** | **356.0** | **(8.6)** | **3,010.1** | **2,167.1** | **(28.0)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 112.5 | 109.3 | (2.8) | 1,019.5 | 799.2 | (21.6) |
| தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.8 | 3.0 | 65.1 | 111.5 | 19.3 | (82.7) |
| இதில் அரிசி | | | 177.9 | 100.5 | 7.0 | (93.1) |
| பால் உற்பத்திகள் | 23.6 | 26.5 | 12.4 | 190.3 | 178.1 | (6.4) |
| காய்கறிகள் | 25.1 | 23.8 | (5.3) | 195.1 | 165.1 | (15.4) |
| கடலுணவு | 12.1 | 20.5 | 69.4 | 116.7 | 127.7 | 9.4 |
| வாசனைத்திரவியங்கள் | 10.2 | 11.3 | 10.8 | 62.1 | 61.4 | (1.2) |
| சீனி மற்றும் சிற்றுாண்டிகள் | 19.1 | 9.0 | (52.6) | 171.9 | 113.4 | (34.1) |
| குடிபானங்கள் | 7.1 | 4.7 | (33.7) | 50.2 | 46.2 | (7.9) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 13.5 | 10.5 | (22.0) | 121.7 | 88.0 | (27.7) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 276.9 | 246.8 | (10.9) | 1,990.6 | 1,367.9 | (31.3) |
| தனியாள் ஊர்திகள் | 137.0 | 95.4 | (30.4) | 949.7 | 419.6 | (55.8) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 40.9 | 50.4 | 23.3 | 299.7 | 299.6 | (0.0) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 18.7 | 26.0 | 39.5 | 160.0 | 141.2 | (11.8) |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப் பொருட்கள் | 24.4 | 21.9 | (10.4) | 189.5 | 156.0 | (17.7) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 18.1 | 16.1 | (10.9) | 138.1 | 113.7 | (17.7) |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 13.1 | 15.4 | 17.3 | 97.2 | 90.7 | (6.8) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 24.7 | 21.5 | (12.9) | 156.3 | 147.1 | (5.9) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **975.3** | **969.6** | **(0.6)** | **7,295.2** | **6,516.0** | **(10.7)** |
| எரிபொருள் | 276.6 | 314.7 | 13.8 | 2,370.2 | 2,315.6 | (2.3) |
| இதில் மசகெண்ணெய் | 55.1 | 94.1 | 70.8 | 486.4 | 585.4 | 20.4 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 221.5 | 220.5 | (0.5) | 1,736.6 | 1,604.9 | (7.6) |
| நிலக்கரி | 0.0 | 0.1 | 219.9 | 147.2 | 125.3 | (14.9) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 13.3 | 21.4 | 61.3 | 508.4 | 109.5 | (78.5) |
| இதில் தங்கம் | 0.1 | 0.1 | 2.3 | 437.9 | 1.7 | (99.6) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 249.6 | 248.6 | (0.4) | 1,610.1 | 1,643.4 | 2.1 |
| இரசாயன உற்பத்திகள் | 78.5 | 75.2 | (4.2) | 524.6 | 486.7 | (7.2) |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 58.8 | 55.0 | (6.5) | 411.8 | 344.9 | (16.2) |
| அடிப்படை உலோகங்கள் | 91.9 | 47.1 | (48.7) | 381.0 | 324.6 | (14.8) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 47.5 | 42.3 | (11.0) | 297.8 | 253.5 | (14.9) |
| கோதுமை மற்றும் சோளம் | 19.0 | 35.1 | 84.4 | 212.1 | 178.5 | (15.8) |
| ஊர்திகள் மற்றும் எந்திர உதிரிப்பாகங்கள் | 23.2 | 24.2 | 4.5 | 175.2 | 158.0 | (9.8) |
| கனிம உற்பத்திகள் | 13.0 | 17.3 | 32.6 | 98.1 | 125.7 | 28.1 |
| வளமாக்கி | 17.6 | 12.0 | (31.8) | 138.7 | 105.3 | (24.1) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 12.8 | | (35.6) | 44.5 | 32.5 | (26.9) |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 73.5 | 68.5 | (6.8) | 522.7 | 437.6 | (16.3) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **386.3** | **389.9** | **0.9** | **2,818.7** | **2,625.5** | **(6.9)** |
| பொறி மற்றும் கருவிகள் | 216.4 | 193.5 | (10.6) | 1,480.3 | 1,425.8 | (3.7) |
| கட்டடப் பொருட்கள் | 119.6 | 148.8 | 24.4 | 878.8 | 874.2 | (0.5) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 50.0 | 46.8 | (6.4) | 455.9 | 321.3 | (29.5) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.4 | 0.9 | 137.6 | 3.7 | 4.1 | 11.0 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **3.5** | **0.4** | **(88.7)** | **71.5** | **3.4** | **(95.3)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,754.5** | **1,715.9** | **(2.2)** | **13,195.5** | **11,311.9** | **(14.3)** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்


- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் தொடர்ந்தும் உறுதியான அடிப்படையில் மீட்சியடைந்து வருகின்றன. இதற்கமைய, வருகைகள் 2019 யூனின் 63,072 இலிருந்து 2019 யூலையில் 115,701 இற்கு 83.4 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, வருகைகளின் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சி 2019 யூனின் 57 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடனும் 2019 மேயின் 70.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன ஒப்பிடுகையில் 2019 யூலையில் 46.9 சதவீதத்திற்கு குறுக்கமடைந்தது. சீனா, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தன.
- 2019 யூலையில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018 யூலையின் ஐ.அ.டொலர் 409 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 217 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,595 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,110 மில்லியனாக மதிப்பிடப்பட்டது.
- அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 யூலையில் ஐ.அ.டொலர் 626 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 1.0 சதவீத்தினால் வளர்ச்சியடைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019 முதல் ஏழு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,895 மில்லியனுக்கு 8.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 7: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள் (யூலை)**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**வரைபடம் 8: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2019 யூலையில் அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 33 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இவ்வாண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் அரச பிணையங்களிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 129 மில்லியனாக விளங்கின.
- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2019 யூலை மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 44 மில்லியன்


கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன. இதன்படி, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான நிதியியல் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 34 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2019 யூலையில் ஐ.அ.டொலர் 86 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 யூலை இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.3 பில்லியனாக விளங்கி 4.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. அதேவேளை, 2019 யூலையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 11.0 பில்லியனாக விளங்கி 6.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 9: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 செத்தெம்பர் 25ஆம் திகதி வரையான இவ்வாண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 0.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டு காலப்பகுதியில் ரூபா, யப்பானிய யென் மற்றும் கனேடிய டொலர் தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 10: ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 செத்தெம்பர் 25 வரை<br>உயர்வு (+)/<br>தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.7% |
| யூரோ | -12.7% | +4.7% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | +2.5% |
| யப்பானிய யென் | -18.1% | -2.2% |
| கனேடியன் டொலர் | -9.3% | -2.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +4.5% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.2% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி